திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மேற்படி தொழிற்சாலை கழிவு நீரால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு உள்ளன என்பதை நான் நேரடியாகப் பார்த்திருக்கின்றேன். இது என் தொகுதியில் வருகிறது. அதிகாரிகள் தவறான குறிப்புகளை அமைச்சர் அவர்களுக்கு தந்திருக்கின்றார்கள். ஆகவே, தவறான குறிப்புக்களை கொடுத்துள்ள அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப் படுமா ? அந்த நிலங்களில் விவசாயம் நடக்காததால், உணவு தானியங்கள் சரியான முறையில் விளைவிக்கமுடியாததால், உணவுப் பற்றாக்குறை அந்தப் பகுதியில் அதிகமாக ஆகியிருக்கிறது. ஆகவே, இதைப் பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப் படுமா ? அந்தத் தொழிற்சாலை அதிபர் மீது கிரிமினல் வழக்கு தொடரப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இராமநாதபுரம் மாவட்டம் இடையான்குளம் பஞ்சாயத்து எல்லையில் உள்ள ஸ்ரீராம் வச்சரத் தொழிற்சாலையை திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரும் மற்றும் சுகாதார ஆய்வாளரும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு இத்தொழிற்சாலைக்கு அடுத்துள்ள மற்றும் அருகாமையிலுள்ள விளைச்சல் நிலங்களில் சாகுபடி எதுவும் பாதிக்கப்படவில்லையென்றும் மேலும் அந்த நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், கரும்பு பயிர்கள் ஏனைய இடங்களிலுள்ள நிலங்களில் விளையும் பயிர்களைப்போல் நன்றாக உள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியுள்ளார்கள். தொழிற்சாலையை ஒட்டி மேற்கேயுள்ள இரு நிலங்களின் சாகுபாளர்களும் வடக்கு பக்கமுள்ள ஒரு நிலத்தின் சாகுபடியாளரும் வயலின் மகசூல் எதுவும் பாதிக்கப்படவில்லை என்று வாக்குமூலம் தந்துள்ளனர். எனவே தவறான தகவலை கொடுத்திருப்பதாக உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு தகவல் தருவார்களேயானால் தவறான தகவல் கொடுத்த அதிகாரி மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தண்டராம்பட்டு தொகுதியில் போடப்பட்ட கைப்பம்புகள்.

*வினா எண் 863—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள கிராமங்களில் 1980 ஜூலை முடிய போடப்பட்ட கைப் பம்புகள் எத்தனை ?

1981 ஏப்ரல் 24]

(ஆ) அவற்றில் நல்ல முறையில் இயங்கிக் கொண்டு இருப்பவை எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 122.

(ஆ) 113.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 122 கை பம்புகள் போடப்பட்டு அவற்றில் 113 நல்ல முறையில் செயல்படுகின்றன என்று கூறியிருக்கிறார்கள். தண்டராம்பட்டில் பாக்கியுள்ள கிராமங்களுக்கும், தற்போது கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில், உடனடியாக கைப்பம்புகள் போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கேள்வி, இருக்கும் கைப் பம்புகள் பற்றியது. அதில் சீர் செய்யவேண்டியவை விரைவில் சீர் செய்யப்பட ஏற்பாடு செய்யப்படும். மேலும் போடவேண்டுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்துதான் சொல்ல முடியும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பழுதடைந்திருக்கின்ற பம்புகளை ரிப்பேர் செய்வதுபற்றி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதிகாரிகளைக் கேட்கிறபோது—அங்கே தண்டராம்பட்டு தொகுதியில் பழுதுபட்டிருப்பதைப்போல் வட ஆற்காடு மாவட்டத்தில் பல தொகுதிகளில் பழுதடைந்திருக்கின்றன. அந்த பம்புகளை பழுதுபார்க்கிறபோது, சில பம்புகளை அங்குள்ள மெக்கானிக்குகளே பழுது பார்த்து விடுகிறார்கள். சிலவற்றைப் பழுது பார்க்க மெஷின்ஸ் தேவைப்படுகின்றது என்று சொல்கிறார்கள். அந்த மாவட்டத்தில் பம்புகளை ரிப்பேர் செய்ய மெஷின்ஸ் போதுமான அளவில் இல்லாததால் பல பம்புகள் பழுதடைந்து இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த பம்புகளை பழுதுபார்க்க தேவையான நிதி அளித்து தக்க நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வறட்சி நிவாரணப்பணியில் குடிநீருக்காக நிரம்பப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கிடைத்த தகவல் பழைய தகவல் என கருதுகிறேன். லேட்டஸ்டாக மிகமிகச் சிறப்பான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லோரும் பாராட்டுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினருக்குக் கிடைத்த தகவல் சரி என்று தெரிந்தால் குறுகிய கால வினா போட்டால்கூட நான் அதற்கு அனுமதி தருகிறேன். அதற்கான பதிலைத் சேகரித்துத்தருகின்றேன். உறுப்பினர் அவர்கள்கொடுக்கக்கூடிய தகவல் லேட்டஸ்ட் தகவலாக இருக்க வேண்டும்.